www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



# திராவிட மொழிக்குடும்பம்

## குறுவினா

(1) நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?

தென் திராவிடம் என்ற இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது.

* தென் திராவிடம் சார்ந்த தமிழ்மொழியை நாம் பேசுகிறோம்
* தொன்மையும் இலக்கிய, இலக்கண வளமும் உடைய மொழி தமிழ்
* சில திராவிட மொழிகளின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது தமிழ்

(2) தமிழ் தமிழோவியம் கவிதையால் உங்களை மகிழ்வும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.

* "குறைகள் சொல்வதை விட்டு விட்டுப் புதுக்கோலம் புனைந்து தமிழை வளர்ப்பாய்".
* குறைகளைப் பேசுவது மனிதனின் செயல்பாடுகளுள் ஒன்று.
* ஆனால் நிறைகளைக் காணாமல் குறைகளைப் பேசுவது மனித மனங்களைக் காயப்படுத்தும்.
* அதனால் நிறைகளைப் பேசி புதுக்கோலம் புனைந்து வாழ்வோம்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

3) கண்ணி என்பதன் விளக்கம் யாது?

* இரண்டு கண்களைப் போல் இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர்.

* அது அதேபோல் தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

4) கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக.

Ans

* சாப்ட்வேர் (software) - மென்பொருள்
* ப்ரௌசர் (browser) - உலவி
* க்ராப் (crop) - செதுக்கி
* கர்சர் (cursor) - ஏவி அல்லது சுட்டி
* சைபர்ஸ்பேஸ் (cyberspace) - இணைய வெளி
* சர்வர் (server) - வையக விரிவு வலை வழங்கி.
* லேப்டாப் (Laptop) - மடிக்கணினி

என்றெல்லாம் பயன்படுத்தத் தொடங்கி விட்டோம்.

(3)

5) அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள் - அவை இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வாறுகள் உரைத்தவை யாவை?

* அகநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை போன்ற அகப்பொருளை விளக்கும் இலக்கியங்கள்

* புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற புறப்பொருளை விளக்கும் இலக்கியங்கள்.

* இவ்விலக்கியங்கள் எல்லாம் வாழ்வியலை விளக்கும் இலக்கணங்களாக அமைந்துள்ளன.

6) செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

* 'படு' என்பதைப் போல 'உண்' 'பெறு' முதலான துணைவினைகள் செயப்பாட்டு வினைகளாக அமைகின்றன.

* அவற்றைப் போலவே, எச்சங்களுடன் சேர்ந்து 'அடையாற்று, போயாற்று, போனது' முதலான துணை வினைகள் செயப்பாட்டு வினைகளை உருவாக்குகின்றன.

கோவலன் கொலையுண்டான்
ஓவியம் குமரனால் வரையப்பட்டது
ஒரு கட்டியாயாற்று.

7) அணைபோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

* வேற்றுமைத் தொடர் (உ டு)

* விளித் தொடர்

## சிறுவினா

1) சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?

உலகின் தொன்மையான மொழியாகவும் செவ்வியல் மொழிகளுள் ஒன்றாகவும் திகழ்வது கிரேக்க மொழியில் (மொழியாகும்) இம் மொழியின் கடல் சார்ந்த சொற்களில்

எறிதிரை [எறுதிறான்]

கலன் [கலயுகோய்]

நீர் [நீரியோஸ்]

[நீரிய] [நாவாய்] [நாயு]

தோணி [தோணீஸ்]

2) திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

விடை: திராவிட மொழிக் குடும்பம் நில அடிப்படையில் குடும்பம், நில அடிப்படையில் மூன்று வகைப்படும்

* தென் திராவிட மொழிகள்

* நடுத் திராவிட மொழிகள்

* வட திராவிட மொழிகள்

✓ இவற்றுள் எனக்குத் தெரிந்த மொழிகள் தமிழ், தெலுங்கு ஆகும்

✓ அவற்றின் எனக்குத் தெரிந்த மொழிகள் தமிழ், தெலுங்கு ஆகும்

✓ அவற்றின் சிறப்பியல்புகளைக் காண்போம்

தமிழ் மொழி :-

* பல உலக நாடுகளில் பேசப்படும் மொழியாக உள்ளது.

* சில நாடுகளில் ஆட்சி மொழியாகவும் தமிழ் திகழ்கிறது.

* திராவிட மொழிகளின் பிறமொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழ்.

**மலையாளம் :-**

* இனிமையும் இலக்கண வளமும் நிறைந்தது மலையாளம்

* அற இலக்கியங்களால் வளமிக்க மொழியாக உள்ளது.

* மெல்லினச் சொற்கள் பேச்சு வழக்கில் மிகுந்து காணப்படும் மொழி மலையாளம்

~~3) கண்ணி என்பதன் இலக்கணம் யாது?~~

3) மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர் ஒன்று போலவே அமைந்துள்ளன

Any 4

* மூன்று - தமிழ் ✓
* மூணு - மலையாளம் ✓
* மூடு - தெலுங்கு ✓
* மூரு - கன்னடம் ✓
* மூஜி - துளு

4) காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

* திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்றது தமிழ்.

* பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந் துணையாக அமைந்துள்ளது.

* தமிழ் மொழி மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகிறது.

* அத்துடன் தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.

5) வளரும் செல்வம் - உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச் சொற்களை :-

குறுவினா - 4 question
சிறுவினா - (1) question } Answer.

6) தன்வினை பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக :-

பந்து உருண்டது என்பது தன்வினை

உருட்டவைத்தான் என்பது பிறவினை.

எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை எனப்படும்.

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



எழுவாய் ஒரு வினையைச் செய்யவைத்தால் அது பிறவினை எனப்படும்.

* தன்வினை – அவன் திருந்தினான்
* பிறவினை – அவனைத் திருந்தச் செய்தான்.

7) "புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்" உங்கள் பங்கினைக் குறிப்பிடுக:-

* மாலை மடக்கிக் கொண்டு வீணையில் இசை வரவில்லை என்று சொல்வது போல் பிறரைக் குறை சொல்வதை விட்டுவிட்டுப் புது வழிவெடுத்து அனைவரும் தமிழை வளர்ப்போம்

* இயல்தமிழாய், இசைத்தமிழாய் நாடகத்தமிழாய் இருந்த முத்தமிழ் இன்று அறிவியல் தமிழாய், கணினித்தமிழாய் இணையத்தமிழாய் புதுக்கோலம் கொண்டு வளர்ந்து வருகிறது.

## நெடுவினா

1) திராவிட மொழிகளின் ஒப்பாய்வில் இவ்வாய்வு பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

1) திராவிட மொழிக்குடும்பம் :-

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் அவற்றின் பிறப்பு, தொடர்பு, அமைப்பு உறவு ஆகியவற்றின் அடிப்படையில் பல மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

2) திராவிடம் :-

* தமிழ் என்னும் சொல்லிலிருந்துதான் திராவிடம் என்னும் சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

* ஹீராஸ் பாதிரியார் என்பார் இம்மாற்றத்தை

தமிழ் → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா என்று வந்ததாக விளக்குகின்றார்.

3) மொழி ஆய்வு :-

* திராவிட மொழிக்குடும்பம் என்னும் பகுப்பு உருவாவதற்கு ஒரு வரலாறு இருக்கிறது.

* தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் சமஸ்கிருத மொழியிலிருந்து உருவானவை என்ற கருத்து அறிஞர் பலரிடையே நிலவிவந்தது.

4) அறிஞர் வில்லியம் ஜோன்ஸ் :-

அறிஞர் வில்லியம் ஜோன்ஸ் என்பார் வடமொழியை ஆராய்ந்து பிற ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது வடமொழி என முதன் முதலில் குறிப்பிட்டார்.

5) திராவிட மொழிக் கருத்து :-

* முதன் முதலில் பிரான்சிஸ் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார்.

* இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதித் தென்னிந்திய மொழிகள் எனவும் பெயரிட்டார்

6) ஹோக்கன் :-

* ஹோக்கன் என்பார் இம்மொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் என்று பெயரிட்டதோடு ஆரிய மொழிகளிலிருந்து இவை மாறுபட்டவை என்றும் கருதினார்.

* மாக்ஸ் முல்லரும் இதே கருத்தைக் கொண்டிருந்தார்.

7) திராவிட மொழிகளின் :-

1856 * 1856 இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் கால்டுவெல்

* திராவிட மொழிகள் ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனவும் மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளடம் செல்வாக்குச் செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார்

8) திராவிட மொழிக்குடும்பம் :-

தென்னிந்திய மொழிகள் :-

திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில்

* தென்திராவிட மொழிகள்
* நடுத்திராவிட மொழிகள்
* வடதிராவிட மொழிகள் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

2) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை உரைக்க எழுதுக :-

1) அமுதத்தமிழே :-

* இனிக்கும் தெளிந்த அமுதமாய் அந்த அமிழ்தினும் மேலான முத்தி ஆகிய விடுதலை தரும் கனியே!

* இயல், இசை, நாடகம் என தமிழே! மூன்றாய்ச் சிறந்து விளங்கும் என் தமிழே! அறிவால் உண்ணப்படும் தேனே!

2) சிந்தாமணியே :-

* பாவின் திறம் அனைத்தும் கைவரப்பெற்று (பொருந்தி நின்று) என்றுமே 'சிந்தா (கெடாத) மணியாய் இருக்கும் உன்னை (இசைப்பாடல்களுள் ஒரு வகையான)

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



* 'சிந்த' என்று (அழைப்பது நின் பெருமைக்குத் தகுமோ? அவ்வாறு) கூறிய நா இற்று விழும் அன்றோ?)

3) பத்துக்குணங்கள் :-

* செறிவு
* தெளிவு
* சமநிலை
* இன்பம்
* ஒழுகிசை
* உதாரம்
* உய்த்தலில்
* பொருண்மை
* காந்தம்
* வலி
* சமாதி என்னும் பத்துக்குணங்களை யும் பெற்றுள்ளாய்

4) நாறு வண்ணங்கள் :-

* மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள்

* வெண்மை
* செம்மை
* கருமை
* பொன்மை
* பசுமை என ஐந்திற்குமேல் இல்லை.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

நீயோ புலவர்கள் கண்டடைந்த குறில் அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடைமெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய்

5) சுவை மிகு தமிழ் :-

* நாவின் மீது பொருந்தும் குறைபாடுடைய உணவின் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை.

* நீயோ செவிகளுக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய்

6) அழகுமிகு தமிழ் :-

தமிழை அடையப் பெறாத மற்றையோர்க்கு அறியாத அழகு ஒன்றே ஒன்று அல்லாமல் அதிகம் உண்டோ? நீயோ நீங்காத அம்மை முதலிய அழகுகள் எட்டினைப் பெற்றுள்ளாய

7) வேண்டுகோள் :-

(ii) Point

தமிழ்விடு தூது: மதுரையில் கோவில்கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல்கொண்ட பெண் ஒருத்தி தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது.

× ×

# இயல் - 2

## unit - 2

### குறுவினா

1) "கூவல்" என்று அழைக்கப்படுவது எது?

கூவல் - உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை.

2) உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக

* ஆறு
* குளம்
* வாய்க்கால்
* கிணறு

3) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்புத் தருக:-

* நீர் இன்றி அமையாத உடல் உணவால் அமைவது ;
* உணவையே முதன்மையாகவும் உடையது.
* எனவே உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவர்.

+ 4) நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

* அன்னங்கள் விளையாடும் அகலமான துறைகளைக் கொண்ட நீர்நிலைகளில் எருமைகள் வீழ்ந்து மூழ்கும்.

* அதனால் அந்நீர்நிலைகளில் உள்ள வாளை மீன்கள் துள்ளி எழுந்து அருகில் உள்ள பாக்கு மரங்களின் மீது பாயும்.

* இக்காட்சியானது நிலையான வானத்தில் தோன்றி மறையும் வானவில்லைப் போன்று விளங்கும்.

5) மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல் காடும் உடையது அரண் - இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?

* நீர்
* மண்
* மலை
* காடு

## சிறுவினா

1) அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்யவேண்டியவற்றை எழுதுக:- pg:-36

* ஆண்டுதோறும் பெய்கின்ற மழைப்பொழிவை அக்கறையுடன் பயன்படுத்தும் செயல்திட்டத்தை நாம் உருவாக்க வேண்டும்

* அறிவியல் அணுகுமுறையில் மழைநீரைத் தேக்கி வைத்துப் பாசனத்திற்குப் பயன்படுத்த ஊர்தோறும் ஏரிகளை உருவாக்கினர் நம் முன்னோர்.

* அவற்றைத் தூர்வாரி முறையாகப் பராமரிப்புப் பணிகளைச் செய்தல் வேண்டும்.

* இதை ஒரு மக்கள் இயக்கமாக மழைக்காலத்திற்கு முன்பே செய்ய வேண்டும்.

* இயற்கை நமக்குத் தரும் தண்ணீர்க்கொடையைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவதே நீர்த்தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் சிறந்த வழியாகும், என்பதைக் கூறி நிறைவு செய்கின்றேன்.

2) நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை? Pg:-45

* நிலம் குழிந்த இடங்கள்தோறும் நீர்நிலையைப் பெருகச் செய்தல் வேண்டும்.

* அவ்வாறு நிலத்துடன் நீரைக் கூட்டியோர் மூவகை இன்பத்தையும் நிலைத்த புகழையும் பெறுவர்.

* இதைச் செய்யாதவர் புகழ் பெறாது வீணே மடிவர்.

3) சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது? Pg:- 35

* மழைக்காலங்களில் ஏரி நிரம்பும்போது நீந்துவதில் வல்லவரான ஒருவர் தண்ணீருக்குள் சென்று கழிமுகத்தை அடைந்து குமிழித்தூம்பை மேலே தூக்குவார்.

அடியில் இரண்டு துளைகள் காணப்படும்.

மேலே இருக்கும் நீரோடித் துளையிலிருந்து நீர் வெளியேறும்.

* கீழே உள்ள சேறோடித் துளையிலிருந்து நீர் சுழன்று சேற்றுடன் வெளியேறும்.

* இதனால் தூர் வார வேண்டிய அவசியம் இல்லை.

## பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

* மொட்டைக் கிளைகளோடு நின்று கொண்டு தினமும் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது மரம்.

* நான் பட்டமரமாய் இருப்பதால் தன்னை வெட்டி எடுக்கும் நாள் வருதை நினைத்து மரம் விசனம் அடைந்தது.

* வெட்டப்படும் ஒரு நாள் வரு மென்று விசனம் அடைந்தனையோ?"

## நெடுவினா

நீரின்று அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் அழகினை எடுத்துக்காட்டுடன் விவரிக்க :- Pg: 33,34,37

முன்னுரை :-

* நீரின்று அமையாது உலகம் என்னும் நம் கருத்தைத் தெளிவாகப் பதிவுசெய்துள்ளார்

திருவள்ளுவர்

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



* அடியில் இரண்டு துளைகள் காணப்படும்.

* மேலே இருக்கும் நீரோடித் துளையிலிருந்து நீர் வெளியேறும்.

* கீழே உள்ள சேறோடித் துளையிலிருந்து நீர் சுழன்று சேற்றுடன் வெளியேறும்.

* இதனால் நீர் வார வேண்டிய அவசியம் இல்லை

4) பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

* மொட்டைக் கிளைகளோடு நின்று கொண்டு தினமும் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது மரம்.

* நான் பட்டமரமாய் இருப்பதால் தன்னை வெட்டி எடுக்கும் நாள் வருவதை நினைத்து மரம் கவலை அடைந்தது.

* வெட்டப்படும் ஒரு நாள் வரு மென்று கவலை அடைந்தனையோ?"

## நெடுவினா

1) நீரின்று அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் அழுத்தை எடுத்துக்காட்டுடன் விவரிக்க :- Pg:- 33, 34, 37

முன்னுரை :-

* நீரின்று அமையாது உலகம் என்னும் நம் கருத்தைத் தெளிவாகப் பதிவுசெய்துள்ளார் திருவள்ளுவர்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



* நீரே மனித வாழ்வின் அடிப்படை என்பதால் நம்முடைய முன்னோர்கள் பல்வேறு வகையான நீர் நிலை வடிவங்களை உருவாக்கி நீரைப் பாதுகாத்தனர்.

2) மழை உழவுக்கு உதவுகிறது :-

* மழை உழவுக்கு உதவுகிறது.

* விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது.

* நிலமும் மரமும் உயிர்கள் நோயின்றி வாழவேண்டும் என்னும் நோக்கில் வளர்கின்றன என்று மாங்குடி மருதனார் கூறியதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

3) உணவெனப்படுவது நிலத்தொடு நீரே :-

* மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண்

* என்னும் குறட்பாவில் நாட்டின் சிறந்த பாதுகாப்புகளில்,

நீருக்கே முதலிடம் தருகிறார் திருவள்ளுவர்

* உணவெனப்படுவது நிலத்தொடு நீரே (புறம் 18) என்ற சங்கப்பாடல்,

* நீரின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறது.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

* நீரே மனித வாழ்வின் அடிப்படை என்பதால், நம்முடைய முன்னோர்கள் பல்வேறு வகையான நீர் நிலை வடிவங்களை உருவாக்கி நீரைப் பாதுகாத்தனர்.

2) மழை உழவுக்கு உதவுகிறது :-

* மழை உழவுக்கு உதவுகிறது.

* விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது.

* நிலமும் மரமும் உயிர்கள் நோயின்றி வாழவேண்டும் என்னும் நோக்கில் வளர்கின்றன என்று மாங்குடி மருதனார் கூறியதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

3) உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே, உணவெனப்படுவது நிலத்தொடு நீரே :-

* மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண்

* என்னும் குறட்பாவில் நாட்டின் சிறந்த பாதுகாப்புகளுள்,

நீருக்கே முதலிடம் தருகிறார் திருவள்ளுவர்.

* உணவெனப்படுவது நிலத்தொடு நீரே (புறம் 18) என்ற சங்கப்பாடல்,

* நீரின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறது.

4) பல்லுயிர்ப் பாதுகாப்பு :-

* உலகின் பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கு அடிப்படைத் தேவையாக உள்ள தண்ணீரைப் பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.

* நமது முன்னோர்கள் கண்டுணர்ந்த மரபார்ந்த அணுகுமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

✓ குளம்
✓ ஏரி
✓ கால்வாய்
✓ கிணறு போன்ற நீர்நிலைகளின் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்குதல் வேண்டும்.

5) நிறைவுரை :-

* உணவு உற்பத்திக்கு அடிப்படை நீரே.

* அதுமட்டுமன்றி நீரே உணவாகவும் இருக்கிறது என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே,

> துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
> துப்பாய தூஉம் மழை

என்று திருவள்ளுவர் கூறியுள்ளதைக் கருத்தில்கொண்டு செயல்படுவோம்.

www.Padasalai.Net

## 2) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக :-

Pg:- 42, 43

### முன்னுரை :-

* சைவ சமயப் பெரியபுராணம் சுந்தரரும் நம்பியாண்டார் நம்பியும் பாடிய சைவ அடியார்களின் வரலாற்றுக் குறிப்புகளின் விரிவான நூலே பெரிய புராணம்.

* இதைப் பாடியவர் சேக்கிழார்.

* ஒவ்வொரு புராணத்திலும் ஒவ்வோர் அடியவராது அருபக்தர் முவர் சிறப்புகளைப் பாடியருக்கிறார் " பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்று இவரை மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாராட்டுவார்.

* திருநாட்டுச் சிறப்பை இயற்கை வளத்துடன் விளக்கியருக்கிறார் சேக்கிழார். அதை உற்று நோக்குவோம்.

### காவிரிக் கால்வாய்கள் :-

* காவிரி நீர் மலையிலிருந்து தேன் நிரம்பிய பூக்களை அடித்துக் கொண்டு வருகிறது.

* அதை வண்டுகள் சூழ்ந்து ஆரவாரம் செய்கின்றன.

* நீர்நிலைகள் நிறைந்த நாட்டுக்கு வளம் தரும் பெரு பொருட்டுக் காவிரிநீர் கால்வாய்களில்

எங்கும் பரந்து இருக்கிறது.

**உழத்தியரின் கால்களை இடறும் சங்குகள்:-**

* நாற்றுகள் செழித்து வளர்ந்து செடிகள் ஆயின.

* முதல் இலை சுருள் விழுந்ததால் களை பறிக்கும் பருவம் வந்தது.

* களைகளைந்து செல்லும் உழத்தியர்களின் கால்களில் முத்துக்களை ஈனும் சங்குகள் இடறின

* அதனால் இடைதளர்ந்து வண்டுகள் மொய்க்கும் மலர்களையுடைய கூந்தல் அசையுமாறு வரப்பினைச் சென்று அடைந்தனர்.

**சோழநாட்டுச் சிறப்பு:-**

* காடுகளில் கரும்புகளும் சோலைகள் எங்கும் மலர் அரும்புகளும் உள்ளன.

* வயலின் ஓரங்களில் கருங்குவளை மலர்கள் மலர்ந்துள்ளன வயல்களில் சங்குகள் கிடக்கின்றன.

* நீர்நிலைகளில் அன்னங்கள் உலவுகின்றன.

* குளங்கள் நிறைந்து கடலைப் போல் காட்சியளிக்கின்றன.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

நாடு முழுவதும் நீர் நாடு என்று சொல்லத்தக்க அளவில் வளமுடையது திருநாடு.

## வாளை மீனும் வானவில்லும்:-

* அன்னங்கள் நீந்தி விளையாடும் நீர்நிலைகளில் எருமைகள் விழுந்து மூழ்கின.
* அதனால் அங்குள்ள வாளை மீன்கள் துள்ளி எழுந்து அருகிலுள்ள பாக்கு மரங்களின் மீது தாவிப் பாயும்.
* இக்காட்சி வானத்தில் தோன்றி மறையும் வானவில்லைப் போன்றதாகும்.
* அறுத்த செந்நெல்லின் சூடுகளைப் (நெற்கற்றை) பெரிய போராகக் குவிப்பர்.
* பறித்த மீன்களையும் குன்றைப் போல் குவித்து வைப்பர்.
* பக்கத்திலேயே தேன் வழியும் மலர்த் தொகுதியை மலைபோல் குவித்து வைப்பர்.

## மேகங்கள் தவழும் பொன்மலை:-

* நெற்கற்றைகளைச் சாய்ச்செய்து எருமைகள் பூட்டப்பட்ட வண்டிகளில்

ஏற்றுவர் உலமாக சுற்றிச் சுற்றி மிதக்கும்

* இத்தோற்றமானது கரிய மேகங்கள் பொன்மலையான் மீது உலமாகச் சுற்றுகின்ற காட்சி போல் உள்ளது.

## மரங்கள் அணிவகுப்பு :-

நீர்வளம் நிரம்பிய அந்நாட்டின்
- ✓ தென்னை
- ✓ செருந்தி
- ✓ நரந்தம், ஒரு பக்கம்
- ✓ அரசமரம்
- ✓ கடம்பமரம்
- ✓ பச்சிலைமரம் குங்குமமரம் வேறு

ஒரு பக்கம் பெரிய அழகாகவும் உடைய

- ✓ பனை
- ✓ சந்தனம்
- ✓ நாகம் வஞ்சி
- ✓ காஞ்சி,
- ✓ கோங்கு முதலிய மரங்கள்

அடர்ந்து அடர்ந்து செழித்து வளர்ந்துள்ளன

நீர்வளமும் நிலவளமுடைய திருநாடு காவிரிநீர் பாய்வதால் இயற்கைச் சூழல் நிறைந்த நாடாக விளங்குகிறது.

## 3. தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக :-

விடை

### முன்னுரை :-

* 'நீரின்றி அமையாது உலகு' என்றார் திருவள்ளுவர்

* நாட்டின் வளர்ச்சிக்கு நீரே ஆதாரம்.

* தண்ணீருக்காக விரைவில் போர் வந்தாலும் ~~வியப்ப~~ வியப்பில் ஆழ்த்த தேவையில்லை என முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் கூறியுள்ளார்.

* இத்தகைய நீர்ப் பற்றாக்குறை பற்றி இக்கதை விளக்கும் கருத்துகளைக் காண்போம்.

### பொட்டுத் தண்ணியில்லை :-

* எப்போது இரயில் வரும் தண்ணீர் பிடிக்கலாம் என்ற அந்தக் கிராம மக்களின் அவலநிலையைச் சொல்லி மாளாது.

* இந்திரா தாக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு வாரியைத் தாண்டி ஓடி, இரயில் நிலையத்திற்குள் புகுந்து தண்ணீரைப்பிடிக்கப் படும் பாடு பெரும்பாடு

### இந்திரா படுகெட்டி !-

* தண்ணீர் பிடிக்க இந்திரா கடும் முயற்சி மேற்கொள்வாள்.

* அவள் படு கெட்டியான பெண்.

* அல்ல எல்லோருக்கும் முன்பாக இடம் பிடிப்பதோடு தண்ணீர் பிடிப்பதிலும் அவள் படு கில்லாடியாக இருந்தாள்.

* இரயில் வந்ததும் அவரைச் செம்பும் கால் செம்புமாகப் பிடித்துக் குடத்தில் தண்ணீரை ஊற்றிக்கொண்டிருந்தாள்

## வந்தால் வெள்ளம்:-

* எல்லா ஊரிலும் பருவகாலத்தில் மழை பெய்யும், புயல், வந்தால் தான் இந்தப் பக்கம் முழுவதும் மழை.

* மழை பெய்வதில்லை.... பெய்தால் பேய் மழை, கண்மாய், ஊருணி எல்லாம் உடைப்பெடுத்து வெள்ளம் போய் மூன்றாம் நாள் மறுபடி நீரில்லாப் பூமியாகக் கிடக்கும்.

## வறட்சி:-

* இப்போது எல்லாமே புண்பட்டுப் போய் விட்டன.

* முல்லை மலர்ந்த நந்தவனம் குட்டிச்சுவர்களில் சின்ன அடையாளங்களோடு பாழடைந்து கிடக்கிறது.

* கிணற்றில் முள்ளை வெட்டிப் போட்டிருக்கிறார்கள்

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



## நல்ல தண்ணீர் :-

* ஊருணிக்குப் பக்கமாயிருக்கிறது அந்த நல்ல தண்ணீர்க் கிணறு.

ஊற ஊறத்தான் இறைக்க வேண்டும்.

* மதியம் வரை மேலப்பட்டி மக்கள் மட்டும் இறைத்துக் கொள்வார்கள்.

* மதியத்துக்கு மேல் வெளியூர் ஆள்களுக்கு விடுவார்கள்.

* நல்ல தண்ணீர் பிடிக்க இந்தப் பாடுபடுவார்கள் அம் மக்கள்.

## இரயில் மட்டுமே கதி :-

* உலகம் பூராவும் தண்ணியில்லைன்னாலும் சரி நாள் தவறாம இரயிலுக்கு மட்டும் எங்கிருந்தாவது கொண்டு வந்து ஊத்திவிட்டுருறான் பாரு.

* இப்படிப் பேசிப்பேசியே மூன்று மணிக்கு வரும் பாசஞ்சர் இரயிலைக் குறி வைத்தது தண்ணீர் பிடித்து வந்தனர் அம்மக்கள்.

## இந்திராவின் அவலம் :-

* இந்திரா ஒரு நாள் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தாள்.

* இன்ஜினிலிருந்து ஊதல் ஒலி வந்தது.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



*இரயில் நகர்ந்து விட்டது.

*இவளால் இறங்க முடியவில்லை.

*வடக்கத்திப்பெண் ஒருவள் இவளைக் கீழே விழாமல் காப்பாற்றினாள்.

*வீட்டில் அவளைத் தேடினார்கள்.

*அவளோ இரயிலில் பயணமானாள்.

## அடுத்த இரயில் நிலையம்:-

*ஊரிலிருந்து பேருந்தில் ஏறி அடுத்த இரயில் நிலையம் செல்ல முயற்சி மேற்கொண்டார்கள் இந்திராவைத் தேடி அலைந்தார்கள்.

*அவளைப் பற்றி மிகவும் கவலைப்பட்டார்கள் "எம்புள்ளை எந்த ஊரு தண்டவாளத்திலே விழுந்து கெடக்கோ" என்று அங்கலாய்த்தாள் தாய்.

## முடிவுரை:-

*அம்மா, அப்பா, ஊர் மக்கள் அனைவரும் இந்திராவைத் தேடி ஓடிக்கொண்டிருந்தார்கள்.

*இறுதியில் தண்டவாளத்தின் ஓரத்திலேயே அவர்கள் தேடிக்கொண்டிருந்தார்கள்.

*இறுதியில் தண்ணீர்க் குடத்தோடு இந்திரா எதிரே வருவதைக் கண்டு அனைவரும் ஆனந்தமடைந்தார்கள்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

28

கேட்டார் .... ' பயமகளே.... இதையும் சுமந்துக்கிட்டா வரணும்.

* இத்தனை வலிக்கும்? இந்திரா சொன்னாள் ...... " வலிக்கும்.. .. நாளைக்கு வரை குடிக்க எங்கே போறது."

தண்ணீர் தான் வாழ்க்கை. தண்ணீர் இல்லையேல் வாழ்வில்லை உயிரில்லை